# அமலோற்பவம் மேல் நிலைப்பள்ளி

*அமலோற்பவம் கல்வி நலச்சங்கத்தால்*

*நிர்வகிக்கப்பட்டு வரும் நிறுவனம்*

தொடக்கம் -26.4.1984

*நிறுவனர்*

## கல்விச்செம்மல் திரு.ச.அ.லூர்துசாமி

**கொள்கை**

ஊக்கமுடைமை ஆக்கத்திற்கு அழகு

**பயணிக்கும் பாதை**

*ஒழுக்கவழி கல்வி*

நோக்கம்

*கற்றலில் சராசரி மற்றும் மெல்ல கற்போரை மேம்படுத்தி தரம் உயர்த்துதல்*

# நாற்பதின் அறிக்கை

**அனைவருக்கும் மாலை வணக்கம் ,**

மகிழ்ச்சி நிறைந்த இந்தத் தருணத்தில் நம் 40 ஆண்டு கால கல்விப் பணி மூலம் ஆற்றிய சேவையையும், அதன் விளைச்சலையும் தலைமை விருந்தினர், சிறப்பு விருந்தினர்கள் மற்றும் அன்புக்குரிய பெற்றோர் அனைவர் முன்பும் பகிர்வதில் பெருமை அடைகிறோம்.

மாறிவரும் உலகச் சூழலில் மாணவப் பருவத்தினரிடையே கல்வித்திறனையும், உடல் மனம் சார்ந்த பன்முகத் திறமைகளையும் வெளிக்கொண்டுவரும் உயர்ந்த நோக்கோடு நிறுவப்பட்டு இன்றுவரை அதே லட்சியங்களுடன் தொடர் சேவையாற்றி வருகிறது நம் அமலோற்பவம் கல்விக்குழுமம்.

26.4.1984-ல் 3 ஆசிரியர்கள், 30 மாணவர்களுடன் ஒரு சிறு கூரைக் கொட்டகையில் தொடங்கப்பட்ட நம் பள்ளி, கடந்த 40 ஆண்டுகளில் எத்தனையோ சவால்களைச் சந்தித்து, முன்னோக்கி வீறு நடை போட்டு, தனது கொள்கையான "ஊக்கமுடைமை ஆக்கத்திற்கு அழகு" என்பதை நடைமுறைப்படுத்தி அனைத்து நிலையினருக்கும் கல்வி சேவை என்பதைத் தனது நாடித்துடிப்பாகக் கொண்டு செயலாற்றி இதோ இன்று, புதுவை மற்றும் தென்னிந்திய அளவில் மதிப்பு மிக்க கல்வியகமாக ஜொலிக்கிறது.

இத்தகைய பெரும் வெற்றிக்கு அடித்தளமிட்டவர் நம் பள்ளியின் நிறுவனர், முதுநிலை முதல்வர், தாளாளர், கல்விச்செம்மல் திரு ச. அ.லூர்துசாமி அவர்கள்.

கல்விப் பணியில் தாம் பெற்றிருந்த 14 ஆண்டு கால அனுபவத்தை மூலதனமாகக் கொண்டு, இடைவிடாத நம்பிக்கையாலும், தொலைநோக்குப் பார்வையாலும் அயராத முயற்சியினாலும் கல்விப்புரட்சி செய்து, சமுதாயத்தில் பின்தங்கி இருந்தோரையும் கல்வி பெற வாய்ப்பற்றோரையும் கல்வி பெறவைத்து, பாதை தெரியாது தவித்த பலருக்கு கல்வி எனும் செல்வத்தை மிக எளிமையாக வழங்கி, தமது லட்சியப் பயணத்தில் சாதனையாளர்களாக அவர்களை மாற்றினார்.

அந்த ஒப்பற்ற லட்சியப் பயணத்தின் 40 ஆண்டு கால பலனாக, இன்று ஒட்டுமொத்த பள்ளியின் மாணவர் எண்ணிக்கை 9,281 என உயர்ந்துள்ளது. இந்த இமய உயரத்திற்கு அவர்தம் உழைப்புதான் காரணம்.

மாநில கல்வித் திட்டத்தில் சாதித்த அமலோற்பவம் மேல்நிலைப் பள்ளியானது, மாறிவரும் கல்வித் தேவையை நிறைவேற்றவும், நீட் போன்ற பல்வேறு நுழைவுத் தேர்வுகளில் மாணவர்கள் சரித்திரம் படைக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடும் அமலோற்பவம் லூர்து அகாதமி (சிபிஎஸ்இ) 2015ல் தொடங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து "பருவத்தே பயிர் செய்" எனும் பழமொழிக்கு இணங்க முன்பாலர் நிலை குழந்தைகளுக்காக அமலோற்பவம் முன்பாலர் நிலை பள்ளியானது கடந்த 2022 இல் தொடங்கப்பட்டது. மேலும் மருத்துவக் கனவில் நீட் தேர்வில் தோல்வி அடைந்தவர்களுக்காக மறு பயிற்சி அளித்து மருத்துவப் படிப்பில் சேர, தேர்ச்சி பெற்ற பேராசிரியர்களைக் கொண்டு அமலோற்பவம் சாம்பியன்ஸ் நிறுவனம் 2023ல் தொடங்கப்பட்டு வெற்றிகரமாக இயங்கி வருகின்றது.

இதில் குறிப்பிடத்தக்க சிறப்பு அம்சமாக அமலோற்பவம் கல்விக் குழுமத்தின் மற்றொரு பரிணாம வளர்ச்சியாக தென்னார்க்காடு மாவட்டத்திலேயே முதன்முறையாக அமலோற்பவம் ஸ்கூல் ஆஃப் ஸ்போர்ட்ஸ் என்ற ஒன்றைத் தொடங்கி சீரிய முறையில் செயல்படுத்தியும் வருகிறது. கல்வியில் காலூன்றி சாதனை படைத்து வரும் அதே வேளையில், விளையாட்டுத் துறையிலும் மாணவர்களை முத்திரை பதிக்கச் செய்யும் உயர்ந்த நோக்கோடு தனது மற்றுமொரு இலக்கினைத் தொடங்கியிருக்கிறது. ஒருங்கிணைந்த ஸ்போர்ட்ஸ் ஸ்கூல் எத்தனையோ மாணவர்களின், பெற்றோர்களின் கனவினை நனவாக்க, இன்றைய சூழலில் விளையாட்டுத் துறையில் தனிக்கவனம் செலுத்தி, அதனால் மாணவர்கள் அடையும் உடல்- உள்ள புத்துணர்வு, வேலை வாய்ப்பு & உயர் கல்வியில் இட ஒதுக்கீடு, இந்திய அரசின் கேலோ இந்தியா விளையாட்டு திருவிழா போன்ற பல்வேறு போட்டிகளில் பங்கேற்று வெற்றியும், தேசிய மற்றும் சர்வதேச புகழும் பெற வேண்டும் என்பதையெல்லாம் கொள்கையாகக் கொண்டு கடந்த ஏப்ரல் மாதம் முதல் சிறப்பாக செயல்பட்டு வருகிறது .

அதன்படி இந்நிறுவனத்தின் பயிற்றுநர்களாக சர்வதேச அளவில் சாதனை புரிந்த வீரர்கள் பயிற்சி அளித்து வருகிறார்கள். திரு. புல்லேலா கோபிசந்த் அவர்கள் தலைமைப் ஒருங்கிணைப்பாளராக செயல்படுகிறார். மேலும் இவர், பேட்மிண்டன் தலைமைப் பயிற்றுநராக உள்ளார். இவர் 1999 ஆம் ஆண்டு அர்ஜுனா விருது, 2001 ஆம் ஆண்டு கேல் ரத்னா விருது, 2009 ஆம் ஆண்டு துரோணாச்சாரியா விருது, 2014 இல் பத்மபூஷன் விருது பெற்றவர்.

அடுத்ததாக திரு சரத் கமல் அவர்கள் டேபிள் டென்னிஸ் விளையாட்டு தலைமைப் பயிற்றுநராக உள்ளார் . இவர் சர்வதேச புகழ் பெற்ற இந்திய டேபிள் டென்னிஸ் வீரர்.

2004 ஆம் ஆண்டு அர்ஜுனா விருது, 2019 ஆம் ஆண்டு பத்மஸ்ரீ விருது, 2022 இல் கேல் ரத்னா விருது பெற்றவர்.

திரு ஆர். பி.ரமேஷ் அவர்கள் சதுரங்க விளையாட்டில் தலைமைப் பயிற்றுநராக உள்ளார். இவர் இந்திய சதுரங்க கிராண்ட் மாஸ்டர் ஆவார் . 2023ஆம் ஆண்டு துரோணாச்சாரியா விருது பெற்றவர். அடுத்ததாக திருமதி. ஆர்த்தி ராமசாமி அவர்கள் . இவர் மகளிர் கிராண்ட் மாஸ்டர் பட்டம் பெற்றவர். 2003இல் இந்திய மகளிர் செஸ் சாம்பியன் போட்டியில் வெற்றி பெற்றவர். இப்படிப்பட்ட கைதேர்ந்த தலைசிறந்த விளையாட்டு வீரர்களைக் கொண்டு நம்முடைய ஸ்கூல் ஆஃப் ஸ்போர்ட்ஸ் ஆனது சர்வதேச தரத்திலான பயிற்சியை அளித்து வருகிறது என்பதை பெருமையுடன் இந்த நேரத்தில் உங்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றோம்.

புதுச்சேரி கல்வி வரலாற்றில் வியக்கத்தக்க பல்வேறு சாதனைகளுக்கும் விருதுகளுக்கும் நிரந்தர விலாசமாகத் திகழ்ந்து வருகிறது நம் அமலோற்பவம்.

பல ஆண்டுகளாக தொடர்ந்து ஆயிரக்கணக்கான மாணவர்களை அரசுப் பொதுத்தேர்வுகளில் இடம்பெறச் செய்வதோடு, ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து 100 சதவீதம் தேர்ச்சி பெற்று, பாடவாரியாக 100/100 மதிப்பெண்கள் பெற்று, புதுவையின் வேறு எந்தப் பள்ளியிலும் இல்லாத அளவு சாதனைகளைக் குவித்து வருகிறது. இதுவரை நடைபெற்ற அரசுப் பொதுத்தேர்வுகளில் 3391 பேர் நூற்றுக்கு நூறு மதிப்பெண் பெற்றும், மேல்நிலை மற்றும் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் தமிழக அளவிலான ரேங்க் பட்டியலில் 24 முறை இடம் பிடித்தும் வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.

பொதுத் தேர்வுகளில் பாடவாரியான சாதனை படைப்போர், மாநில மற்றும் தமிழக அளவிலான சாதனை படைப்போர் அனைவருக்கும் தொடக்கம் முதல் பள்ளியின் தாளாளர் ஆண்டுதோறும் தங்கப்பதக்கங்களை வழங்கி கௌரவித்து வருகிறார். இங்கு படித்த பலர், நாட்டின் புகழ்பெற்ற கல்வி நிறுவனங்களில் உயர்படிப்பு, உலகெங்கும் உயர்பதவி என்று தன்னையும் உயர்த்திக் கொண்டு பள்ளியின் புகழையும் உயரத்தில் தூக்கி நிறுத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும், சிறப்பம்சமாக இவ்வாண்டுக்கான மருத்துவப் படிப்பில், புதுச்சேரி சென்ட்டாக்கின் அரசு இட ஒதுக்கீட்டில் நம் பள்ளியில் படித்த 29 மாணவர்கள் இடம் பிடித்து சாதனை படைத்துள்ளனர் என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

வெறும் பாடம் சார்ந்த சாதனைகள் புரிவது மட்டும் பள்ளியின் நோக்கம் அல்ல. அதைத் தாண்டிய பல்திறன் சார்ந்த சாதனைகளுக்காகவும் நிறுவப்பட்டது தான் நம் பள்ளி என்பதை எடுத்துக் கூறும் விதமாக கலை, அறிவியல் கண்காட்சி, அறிவியல் கருத்தரங்குகள், பெயருக்கு ஏற்றார்போல் தூய்மைப் பள்ளி, பேண்டு இசைக்குழு, பொது அறிவு வினாடி வினா போட்டிகள் , தேசிய கலைத் திருவிழாவாகிய கலா உற்சவ போட்டிகள் என இதுவரை 14 முறை தேசிய விருதுகளை நம் பள்ளி வென்றுள்ளது. மேலும் புதுவை அரசின் கலை பண்பாட்டுத் துறையால் ஆண்டுதோறும் நடத்தப்படும் கம்பன் விழாவில் நமது பாரம்பரியத்தையும் கலாச்சாரத்தையும் வெளிப்படுத்தி சிறப்புப் பதக்கங்களையும் தொடர்ந்து பெற்று வருகிறது. சுழல் கேடயங்களைத் தொடர்ந்து தக்கவைத்துக் கொண்டும் வருகிறது.

குழந்தைகளுக்குப் புத்தகம் சார்ந்த அறிவை மட்டும் கொடுக்காமல், கல்வி இணை செயல்பாடுகள் பலவற்றையும் நம் பள்ளி வழங்கி வருகிறது. அதன்படி யோகா, கவின்கலை மற்றும் உலகளாவிய தொடர்புக்கான ஆங்கில மொழியாளுமைப் பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன . பாடம் கற்பித்தலில் ஏற்ற சூழலை உருவாக்கும் நவீன கட்டமைப்புடன் கூடிய வகுப்பறைகள், கைதேர்ந்த உளவியல் நிபுணர்களைக் கொண்டு வளரிளம் பருவத்தினரான 11 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கான பாடம் மற்றும் வாழ்க்கை பற்றிய வழிகாட்டு நிகழ்வுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும், ஐந்தாம் வகுப்பு முதற்கொண்டு மாணவர்களுக்கு விவசாயம், ரோபோடிக்ஸ், புகைப்படக்கலை, படைப்புக்கலை, தையல் பயிற்சி மற்றும் ஓவியம் போன்ற திறன் சார்ந்த கல்வியும் உரிய அனுபவம் வாய்ந்த பயிற்றுநர்களால் கடந்த ஏழு ஆண்டுகளாக வழங்கப்பட்டு வருகிறது.

இவை மாணவர்களின் பன்முகத் திறன் வெளிப்பட மிகப்பெரிய காரணமாக இருந்து வருகின்றன. மேலும், மாணவப் பருவத்திலேயே சமூக அக்கறை, சேவை மனப்பான்மை ஆகியவற்றை வளர்க்கும் விதமாக தேசிய மாணவர் படை, நாட்டு நலப்பணித் திட்டம், ஆங்கில இலக்கிய மன்றம், தேர்தல் விழிப்புணர்வுக் கல்விக்குழு மற்றும் செஞ்சிலுவைச் சங்கம் ஆகியனவும் சிறப்பாக செயலாற்றி வருகின்றன.

இத்தகைய பன்முனை வளர்ச்சிக்குப் பின்புலமாக சுயநலமின்றிப் பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்கள் இவர்களின் முழு அர்ப்பணிப்பு அடிப்படையாக உள்ளது என்பதை பெருமிதத்துடன் பதிவு செய்கின்றோம். சொற்ப ஆசிரியர்களுடன்

தொடங்கிய பள்ளியில் தற்போது 763 பேர் பணியாற்றுகின்றனர். இவர்களின் அயராத உழைப்புக்கு நன்றி பாராட்டும் விதமாக நம் தாளாளர், அரசுக்கு இணையான ஊதியம் வழங்கி அவர்களை மகிழ்வித்து மகுடம் சூட்டி வருகிறார். அத்துடன் பணி ஓய்வு பெறுபவர்கள் தங்களுக்கான பணிக்கொடை, ஈட்டியல் விடுப்பு மற்றும் வருங்கால வைப்பு நிதி போன்ற பல்வேறு பலன்களையும், அரசுப் பணியாளர்களைப் போலவே பெற்று மகிழவும் வழி செய்து இன்று வரை செயல்படுத்தி வருகிறார் என்பதும் நாம் எல்லோரும் அறிந்த ஒன்றுதான்.

அவ்வகையில் கடந்த ஆண்டு பணி ஓய்வு பெற்றவர்களுக்கான பெருந்தொகையான 76 லட்சம், இந்தத் தேதி வரை நிலுவையின்றி வழங்கப்பட்டுள்ளது என்பதையும் மகிழ்வோடு தெரிவித்துக் கொள்கிறோம். அது மட்டுமல்லாமல் இப்பள்ளியில் 25 ஆண்டுகள் பணியாற்றி வெள்ளி விழா காண்பவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் தங்க காசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக இவ்வாண்டு வெள்ளி விழா காணும் 20 பேர் தலா 4 கிராம் தங்க காசுகள் பெற்றிருக்கின்றனர் .என்பதை இந்நேரத்தில் மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம். ஒவ்வொரு மாணவருக்கும் முழுமையான கல்வியை வழங்கும் வகையில் எல்லா வசதிகளையும், உடல் - உள்ளம் சார்ந்த வளர்ச்சிக்கு பல்வேறு ஏற்பாடுகளையும் செய்து வருகிறது நம் பள்ளி.

நல்ல காற்றோட்டமான, விசாலமான வகுப்பறைகள் மட்டுமன்றி, தரமான கட்டமைப்புடன் கூடிய விளையாட்டு மைதானம் மற்றும் விளையாட்டு உபகரணங்கள், வெளி மாநிலம் மற்றும் வெளிநாடுகளில் இருந்து விடுதியில் தங்கி கல்வி பயில விரும்புவோரின் தேவையை நிறைவேற்றும் விதமாக அருட்சகோதரி மேரி அந்துவானத் விடுதியும் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

இந்த இனிய தருணத்தில் உங்களிடம் சொல்லிக் கொள்ள விரும்புவது என்னவென்றால், உங்கள் குழந்தைகள் எங்கள் குழந்தைகள்; அவர்கள்தாம் நாளைய பாரதத்தின் சொத்துகள். அவர்களை அளவிலா ஆற்றலும் அறிவும் பெற்றவர்களாக்கி, எதிர்கால இந்தியாவின் நம்பிக்கைக்குரிய தூண்களாக மாற்றி, அனைத்து நிலைகளிலும் தன்னிறைவும் தனித்துவமும் பெற நாங்கள் துணை நிற்போம் என்பதை உளமார உறுதிபடக் கூறிக்கொள்கிறோம்.

இந்த மாபெரும் வெற்றிப் பயணத்தில் இத்தனை ஆண்டுகளாக எங்களோடு துணை நின்று வழிநடத்தி வரும் நம் பள்ளியின் பாதுகாவலி அமலோற்பவ அன்னைக்கு முதற்கண் நன்றியைச் சமர்ப்பிக்கிறோம். அடுத்ததாக, எப்போதும் அயராத உழைப்பைத் தந்து துணை நிற்கும் ஆசிரியர்கள், அலுவலக ஊழியர்கள், அன்பின் பணியாளர்கள், செவிலியர்கள், ஒத்துழைப்பு நல்கிய பெற்றோர், உயிரோட்டம் தந்த மாணவச் செல்வங்கள் அனைவருக்கும் இந்நேரத்தில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும், எம் வளர்ச்சிக்குப் பெரிதும் ஆதரவு தந்து வழிகாட்டி நிற்கும் புதுவை அரசுக்கும், உரிய ஆலோசனைகளைத் தொடர்ந்து நல்கி, சிறப்பாக செயல்பட துணை நிற்கும் பள்ளிக்கல்வித்துறைக்கும், பொருளாதார அளவில் தேவையான ஆதரவு நல்கி வரும் வங்கித்துறை சார்ந்த அனைத்து அலுவலர்களுக்கும், சிறப்பான இயக்கத்திற்கு அவ்வப்போது உரிய சட்ட ஆலோசனைகள் வழங்கி வழிகாட்டும் சட்ட வல்லுநர்களுக்கும், வெளிப்படைத்தன்மை மற்றும் ஒருங்கிணைந்த நிதி ஆளுமைக்குத் துணையாக நிற்கும் தணிக்கையாளர்களுக்கும், நம் பள்ளியின் கொள்கை, வெற்றி, சாதனை என அனைத்தும் உலகம் முழுக்க சென்றடைய உதவி செய்யும் பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களுக்கும், காவல் துறை நண்பர்கள், உறவினர்கள், நண்பர்கள், நலம் விரும்பிகள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகள். எல்லாவற்றிற்கும் மேலாக, எங்களின் ஒவ்வொரு அசைவிலும் உணர்வாகிக் கலந்து, எங்களை ஆசீர்வதித்து வழி நடத்தி, பெருமை மிகு இப்பயணத்தில் தொடர்ந்து துணை நிற்கும் அமலோற்பவ அன்னைக்குக் கோடான கோடி நன்றி கூறி மகிழ்வதில் பெருமை கொள்கிறது அமலோற்பவம் கல்விக் குழுமம்.

**அன்னையின்றி ஏது வெற்றி..** **அன்னையிருக்க என்றும் வெற்றி..**

**மரியே வாழ்க!!**